# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதி விசேஷமானது

අංක 2392/35 – 2024 ජූලි මස 10 වැනි බදාදා – 2024.07.10

***2392/35 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை***

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

I. **வழியுரிமையின் விபரம்** :

அம்பதலை களனி கங்கைக்கு குறுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள உவர் நீர் தடுப்பிற்கு மற்றும் உத்தியோகபூர்வ விடுதிக்கு உட்செல்லும் பாதை நிர்மாணிக்கப்பட்டுள்ள காணிப்பகுதியின் வழியுரிமையை எடுத்துக்கொள்ளல்.

II. **காணியின் விபரம்** :

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தில் பியகம பிரதேச செயலாளர் பிரிவில் அதிகாரி பத்துவை சிறு பிரிவில் இல. 278/A, பொல்லேகல கிராம அலுவலர் பிரிவில் பொல்லேகல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இல. GA/BIY/2019/226 மற்றும் 2019.05.31 ஆந் திகதிய வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளை உடைய கீழ்க் குறிப்பிடப்படும் பெயர் மற்றும் விஸ்தீரணத்தையுடைய காணித்துண்டின் எல்லைகள் :

01. துண்டு 'A' - பெலவத்த - விஸ்தீரணம் : 0.1381 ஹெக்டயார்

வடக்கு: வீதி, காணியின் பெயர் மற்றும் உரிமையாளரை கண்டுபிடிக்க முடியாத காணி, சோமலதா குணவர்தன உரிமை கோரும் தரிசு நிலம் மற்றும் பெலவத்த ; கிழக்கு: காணியின் பெயர் மற்றும் உரிமையாளரை கண்டுபிடிக்க முடியாத காணி, சோமலதா குணவர்தன உரிமை கோரும் தரிசு நிலம் மற்றும் பெலவத்த ; தெற்கு: சோமலதா குணவர்தன உரிமை கோரும் பெலவத்த ; மேற்கு: தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை உரிமை கோரும் காணி, சோமலதா குணவர்தன உரிமை கோரும் பெலவத்த, என். ஏ. ஆர். பாலித உரிமை கோரும் தரிசு நிலம் மற்றும் காணியின் பெயர் மற்றும் உரிமையாளரை கண்டுபிடிக்க முடியாத காணி.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/18/2018/WS/447.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 07.

EOG 07 - 0091/1




இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

எனது இல. : 4-3/18/2018/WS/447.
பிரதேச செயலாளரின் தொடர்பு இல. : பிய/3/1/1/504.

1972 ஆம் ஆண்டின் 18 மற்றும் 1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வரைவிலக்கண (திருத்தப்பட்ட) சட்டங்களினால் திருத்தப்பட்ட வரைவிலக்கண கட்டளைச் சட்டத்தின் (12 ஆவது அதிகாரம்) 18 ஆவது பிரிவின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இலக்கம் 2341/32 மற்றும் 2023.07.19 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் 1 A பக்கத்தில் மூன்று மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்ட 5 ஆவது பிரிவின் கீழான அறிவித்தலை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 07.

EOG 07 - 0091/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.